

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளுக்காக வருகை தந்த போது, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சார்ந்தவர்கள் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டும் என மனு அளித்தனர். அவற்றில், மாற்றுத்திறனாளிகள் ஆதரவற்ற மகளிர் நலிவடைந்த பிரிவினர் அளித்த மனுக்களுக்கு உடனே தீர்வு வழங்கிட அதிகாரிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார். இதன்படி, நத்தம்பண்ணை ஊராட்சியில் நடந்த நிகழ்ச்சியின் போது, இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட வாகனம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, மூவருக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் தலா ஒருவருக்கு கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ் மற்றும் பணி நியமன ஆணை போன்றவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்த நலத்திட்ட உதவிகளை பெற்ற பயனாளிகள் அவர்வு சிறக்க வாழ்த்தினார்.



அவைத்தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர், ஆவுடையார்கோயில் ஒன்றிய பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்பட கழகப்பணி மக்கள் பணியாற்றிய கலைஞரின் உடன்பிறப்பு. கழகத்தலைவர் அவர்கள் மீது அளவற்ற பற்று கொண்டவர். மிசா நெருக்கடி நேரத்தில் சிறைகண்ட கழக வீரர் மறைந்த பெரியவர் பொன்பேத்தி மிசா இரா. துரை மாணிக்கம் அவர்களின் திருவுருவப்படத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டையில் திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் அ.தமிழரசி, மரு. வை.முத்துராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்கிறார்!

# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட எழும்பூர், துறைமுகம், திரு.வி.க.நகர் ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!



### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட எழும்பூர், துறைமுகம், திரு.வி.க.நகர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

| சட்டமன்ற தொகுதி | நாள் (ம) நேரம் | இடம் |
|---|---|---|
| எழும்பூர் | 26.05.2025 மாலை: 3.30 மணி. | உமா சூரஜ் மஹால், அங்காளம்மன் கோவில் தெரு, சூளை, சென்னை. |
| துறைமுகம் | 26.05.2025 மாலை: 4.30 மணி | ஸ்ரீ ஆய் மாதாஜி கோயில் 112, தங்கசாலை தெரு, சென்னை– 1. |
| திரு.வி.க நகர் | 26.05.2025 மாலை:5.30 மணி. | எம்.கே.டி மஹால், ஸ்டாரான்ஸ் ரோடு, ஓட்டேரி, சென்னை 12 |

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் அவரவர் உள்ளடங்கிய சட்டமன்ற தொகுதியின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு (மேலே குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள் மட்டும்) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து*

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 94 வது நாள்!

### அம்பத்தூர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே 25- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 94 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (24.5.2025) அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 87 பஜனை கோயில் தெரு, பாடி. 2) வட்டம் 88 அண்ணா அறிவளர்ச்சி மன்றம் ,பாடி வடக்கு மாட வீதி, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ண மூர்த்தி, வட்டச் செயலாளர்கள் டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தர ராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் ஆக்கிரமிப்பில் இருந்த ரூபாய் 50 கோடி மதிப்பிலான 51 சென்ட் நிலத்தை மீட்டெடுத்து இராஜாஜி சாலை நகராட்சி பள்ளிக்கு ரூபாய் 7.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் கட்டடப் பணிகளை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் வட்டாட்சியர் ந. ரஜினிகாந்த், நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர்கள் மோ.இரமேஷ், எஸ். மகாலிங்கம், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், நகர் மன்ற உறுப்பினர் தாமஸ் ( எ) ராஜ்குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தா. மோதிலால், ஜி. வேலாயுதம், ஜெய் கிருஷ்ணா , இராஜா, சேலை சுப்பிரமணி உள்ளிட்ட நகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

# விளக்கம் கேட்பது மலிவான அரசியல், அபத்த நாடகம்!

PEOPLE'S DEMOCRACY

## பீப் பிள்ஸ் டெமாக்ரசி தலையங்கம்!

மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்கவோ அல்லது திருப்பி அனுப்பவோ வேண்டிய காலக்கெடு குறித்த முந்தைய உத்தரவு குறித்து விளக்கம் கோரி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் உத்தரவின் பேரில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நீதிமன்றத்திற்கே அனுப்பிடும் சமீபத்திய முடிவு தொடர்பாக புதுதில்லியில் தற்போது நடைபெற்று வரும் மலிவான அரசியல் நாடகம், ஓர் அபத்த நாடகமே தவிர வேறல்ல. இது தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தன்னிச்சையானது அல்ல. அது ஏராளமான தீர்ப்பு களால் வடிவமைக்கப்பட்டு நீண்டகாலமாக நிறு வப்பட்ட நீதித்துறை தீர்வறிக்கைகளுக்கு அடித் தளமாகும்.

**கிடப்பில் போடக்கூடாது**

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடத்தை குறித்த முந்தைய உத்தரவு தொடர்பாக பதினான்கு கேள்விகளை எழுப்பி, அரசமைப்புச்சட்டத்தின் 143(1)ஆவது பிரிவை குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள் ளார். உண்மையில் தமிழக சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றும் இதில் தலையிட வேண்டும் என்றும் தமிழக அரசுதான் இந்தப் பிரிவின்கீழ் உச்சநீதிமன்றத்தை அணுகியிருந்தது. அரசமைப்புச்சட்டத்தை உருவாக்கியவர்கள், ஒரு சட்டமுன்வடிவு ஆளுநருக்கு அனுப்பப்படும்போது அவர் அதன்மீது "எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக" ("as soon as possible") ஒப்புதல் அளித்திட வேண்டும் அல்லது திரும்ப அனுப்பிட வேண்டும் என்று காலக்கெடுவை நிர்ணயித்தி ருக்கின்றனர். "எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வ ளவு விரைவாக" என்பது மிகவும் கண்ணியமான சொற்றொடர் ஆகும். இதனைப் பயன்படுத்திக் கொண்டு அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளை கிடப்பில் போட்டுவைப்பது கூடாது.

**கருத்துப் பெறுவது கட்டுப்படுத்திடாது**

வேறுசில அரசமைப்புச்சட்டங்களைப் போலல்லாமல் நம்முடைய அரசமைப்புச்சட்டத்திற்கு சவால் விடுக்க குடியரசுத் தலைவரின் பரிந்துரை தேவையில்லை. எந்தவொரு குடிமகனும் கீழமை நீதிமன்றத்திலிருந்து உச்சநீதிமன்றம் வரை, நீதிமன்றங்களை அணுகலாம். நீதிமன்றத்தின் கருத்தைப் பெறுவதற்கான ஏற்பாடு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விதியின் கீழ் அத்தகைய கருத்து கோரப்படும்போது கூட, அது எவரையும் கட்டுப்படுத்திடாது. இவற்றின் அடிப்படையில் ஒன்றிய அரசு நடத்திக் கொண்டிருக்கும் நாடகத்தைப் பார்க்கும்போது, பாஜக அல்லாத மாநில அரசாங் கங்கள் சட்டமியற்றும் அதிகாரத்தை சுதந்திரமாகப் பயன்படுத்துவதை அது விரும்பவில்லை என்பது நன்கு தெரிகிறது. தமிழ்நாடு வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு, எந்தக் கூக்குரலும் இல்லை. ஆளுநர் வெளிப்ப டையாகவே அமைதியாக இருந்தார். ஆனாலும், அரசியல் களத்தில் குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் தூண்டப்பட்டார். தீர்ப்பை மேற்கோள் காட்டி, உச்ச நீதிமன்றம் ஒரு "சூப்பர் நாடாளுமன்ற மாக" மாறிவிட்டது என்று அவர் கடுமையான கருத்தைத் தெரிவித்தார். இதற்கிடையில், ஆளுநர் ரவி எதுவும் நடக்காதது போல் நடந்து கொண்டார். பல தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்ட பிறகும், அவர் மலைவாசஸ்தலமான ஊட்டியில் துணைவேந்தர்களின் கூட்டத்தை கூட்டினார்.

**மறு ஆய்வு மனுச் செய்வது அல்லது சட்டமியற்றுவது**

ஒரு தீர்ப்பின் மீதான அதிருப்திக்கு வழக்கமான சட்டப்பூர்வ தீர்வு என்பது மறுஆய்வு மனுவை தாக்கல் செய்வதேயாகும். ஏனெனில் உச்ச நீதிமன்ற த்தின் தீர்ப்பைத் தாண்டி எந்த மேல்முறையீடுகளும் செய்ய முடியாது. அரிதான சூழ்நிலைகளில், ஒரு மறுசீராய்வு மனுவைத் தாக்கல் செய்யலாம். தேர்தல் ஆணை யர்களை நியமிப்பதற்கான தேடல் குழுவின் அமைப்பை அரசாங்கம் செய்தது போல, தீர்ப்பின் விளைவை ரத்து செய்ய நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவது மற்றொரு வழி. ஆனால் இந்த வழிகளில் எதுவும் பின்பற்றப்படவில்லை. இதுபோன்ற விஷயங்க ளுக்கான அரசமைப்புச்சட்ட அதிகாரியான அட்டர்னி ஜெனரலையும் அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை.

**குடியரசுத் தலைவரின் குறிப்பு அரசு ஏற்காததன் அடையாளமே!**

இந்த விஷயத்தில் எவ்விதமான குழப்பத்திற்கும் இடமில்லை. அரசமைப்புச்சட்டத்தின் 74ஆவது பிரிவின் 42ஆவது திருத்தத்திற்குப்பிறகு, குடியரசுத் தலைவர், அரசமைப்புச்சட்டத்தின்படி, அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையின்பேரில் செயல்படக் கடமைப்பட்டுள்ளார் என்பது தெள்ளத்தெளிவான ஒன்று. எனவே இப்போது இவ்வாறு குடியரசுத் தலைவர் குறிப்பு அனுப்பியிருப்பது ஓர் அரசியல் செய்தியைத் தவிர வேறல்ல. இது, "எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக" ("as soon as possible") என்கிற உச்ச நீதிமன்றத்தின் விளக்கத்தை அரசாங்கம் ஏற்கவில்லை என்பதற்கான ஒரு அடையாள வலியுறுத்தலேயாகும்.


தலையங்கம்/கட்டுரை
விளக்கம் கேட்பது மலிவான அரசியல், அபத்த நாடகம்
PEOPLE'S DEMOCRACY

**தீர்வறிக்கைகளுக்கு முரண்...**

இந்த நிலைப்பாடு என்பது பல ஆண்டு காலமாக நீதித்துறையால் நிறுவப்பட்ட தீர்வறிக்கைகளுக்கு (rulings) முரணானது. குறிப்பாக, ஆளுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் செயல்பட வேண்டும் என்றும், இங்கிலாந்தின் மன்னர்கள் அல்லது அமெ ரிக்காவில் உள்ள ஜனாதிபதிகள் போன்ற சுதந்திர முக வர்கள் அல்ல என்றும் கூறும் 1974ஆம் ஆண்டு ஷம்ஷேர் சிங் வழக்கின் தீர்வறிக்கைக்கு முரணானதாகும். இவ்வாறுதான் நாம் இந்த அபத்தமான நாடக அரங்கில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். உச்சநீதி மன்றம், குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்குப் பதில ளிக்கலாம் அல்லது பதிலளிக்காமல் இருக்கலாம். அது பதிலளித்தாலும்கூட, இதில் கூறப்படும் கருத்து எவரையும் கட்டுப்படுத்தாது.

**ஒற்றையாட்சி அரசுக்காக ஆழமாகச் செல்கிறது...**

மோடி அரசாங்கம், வெளித்தோற்றத்தில் தீங்கற்ற ஆடம்பரமானதாகத் தோன்றினாலும், குறிப்பாக அது தற்போது எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்தில் கொண்டு ஆழமாகச் சென்றுகொண்டிருப்ப தைக் காணத் தவறிவிடக் கூடாது. இவர்கள் நடத்தும் நாடகம் வெறும் அரசியல் நாடகம் என்று கருதுவது அப்பாவித்தனமாகும். உண்மையில் இந்த அரசாங்க மானது இந்துத்துவா சித்தா ந்தத்தால் வழிநடத்தப்படு வதாகும். இந்த சித்தாந்தமானது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வுகளையும், நடைமுறை களையும் நிராகரித்திடும் ஒன்றாகும். எம். எஸ். கோல்வால்கரை முதன்மை சித்தாந்தவாதியாகக் கொண்ட ஆர்எஸ்எஸ் கூட்டம், கூட்டாட்சிக் கோட் பாட்டை (federalism) ஒருபோதும் அதன் உண்மை யான அர்த்தத்தில் ஏற்றுக்கொண்டதில்லை. அது எப்போதும் சிறிய மாநிலங்கள் மற்றும் மையப்படுத் தப்பட்ட ஒற்றையாட்சி அரசாங்கத்திற்காகவே வாதிட்டு வந்திருக்கிறது.

**விளக்கம் பெறுவதல்ல சட்டமன்ற அதிகாரத்தை அரித்தல்...**

அடிப்படை இலட்சியங்களின் மீதான இந்த படை யெடுப்புகளுக்கு எதிராக அரசமைப்புச்சட்டம் இன்று ஓர் அரணாக நிற்கிறது என்பது, சாராம்சத்தில், அபத்தமான இவர்களின் நாடகத்தின் மூலம் மீண்டும் ஒருமுறை தெளிவாகி இருக்கிறது. இவர்களின் உண்மையான நோக்கம் அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சொற்றொடரான "எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக" என்பதற்கான அரச மைப்புச்சட்டத்தின் விளக்கத்தைப் பெறுவது அல்ல. மாறாக ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களின் இறையாண்மை அதிகாரத்தை அரித்து வீழ்த்திட வேண்டும் என்பதேயாகும்.

நன்றி : **தீக்கதிர்**
24- 5- 2025

## கோவி.லெனின் பங்கேற்பு!

# 123 அ வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் அறிவிப்பு!

*சென்னை, மே 25- சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி 123 அ வட்டக்கழகம் சார்பாக பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் நாளை 26.05.2025 திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் BLA (2) BLC கூட்டம் மைலாப்பூர் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் 123அ வட்ட கழக செயலாளர் மு. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறகிறது.*

*இந்த ஆலோசனை கூட்டத்திற்கு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி, முன்னிலை வகிக்கிறார்.*

*மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, எம்.எல்.ஏ. ஆலோசனை படி சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் கோ.வி. லெனின் கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.*

*ஆகவே இந்த சிறப்பு மிக்க கூட்டத்திற்கு வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், (BELA2) பாக உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 123அ வட்டக் கழகம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு 123 அ வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.*